# ARTIVISM: ISSUE 02

## RUNNER UP 1

---

### அதிர்வுகளின் தேசம் –

அனிதா செல்வகுமார்

தொடுதிரை மேயும் விரல்கள்
தொட்டதில்லை ஒருபோதும் சிகரம்
தொல்லைகள் எனவிட்ட தேச வரைபடத்தை மேய்வதில்லை...
தொல்லியல் வரிகள்!

இசையின் நரம்புகளைத் தடவும்
இன்பக் கிழக்கின் சூரியன்!
இதுவரை வெளிச்சத்தை மட்டுமன்றி
இதமான 'K-POP' கனவுகளையும்
இறக்குமதி செய்கிறது.

ஒப்பனை செய்த முகங்களுக்குப் பின்னால்
ஒருவித உழைப்பின் வியர்வை...
ஓடித் துள்ளும் நடன அடிகளுக்குப் பின்னால்
ஒரு தலைமுறையின் வேகம்!

இரு கண்டங்கள் கடந்த ஒரு மொழியின் புரட்சி
இது வெறும் இசையல்ல
இளம் தலைமுறையின் தேச அசைவு
இனியும் எமக்கில்லை இதற்கொரு முடிவு...

# ARTIVISM: ISSUE 02

## RUNNER UP 1

---

### “அதிர்வுகளின் தேசம்” –
அனிதா செல்வகுமார்

தூரத்து தேசத்து துரித கானங்கள்
தூர்தாளம்போட்டு நம் செவிகளில் பாய,
துணிந்து எழு கண்ணே!
தூரத்து ஆசிய தேசம் முன்னே!

சியோல் நகரத்துத் தெருக்களின் வேகம்
சீறிய எம் இளைஞர் இதயத்தின் தாளம்,
சிந்தையில் ஊடுருவும் கலைகள்
சிறப்பாய் கண்டங்கள் கடந்தே கைகோர்த்துச் செல்லும்...

திரை தாண்டிப் பாயும் இந்தத் திரவக் கலைகள்,
திமிர்தனத்தை தகர்த்துத் தொடுக்கும் பாலம்!
கிழக்கின் சலனம் எமக்கேகோர் கனவு - எம்
கிறுக்கலில் பிறக்கும் இன்னுமொரு புதிய வடிவம்!

அபிவிருத்திப் பாதையின் அழகிய நிழலோ?
அதிசய, கலைகளின் ஊடாகக் கண்ட விழிப்போ?
சொற்களால் கோர்ப்போம் இந்த எதிரொலியை - எம்
படைப்புகளால் மாற்றுவோம் ஒரு புதிய வெளியை...

# ARTIVISM: ISSUE 02

## RUNNER UP 1

---

### THE LAND OF VIBRATIONS [TRANSLATION]–

ANITHA SELVAKUMAR

Fingers grazing the touch-screens
Never once touched the peak
The maps etched by modern troubles don't improve...
Archaeological lines!

To stroke the nerves of melody
The Sun of the happy East!
Not just the light until now,
It imports pleasant 'K-POP' dreams too.

Behind the faces adorned with makeup
The sweat of a kind of hard work...
Behind the leaping dance steps
The speed of a generation!

The revolution of a language that crossed two continents
This is not just music
The national pulse of the young generation
And for us, there is no end to this...

# ARTIVISM: ISSUE 02

## RUNNER UP 1

---

### THE LAND OF VIBRATIONS [TRANSLATION] –
ANITHA SELVAKUMAR

Distant melodies of a far-off land,
Rushing into our ears with a rhythmic beat,
Arise with courage, oh dear eyes!
The distant Asian nation is ahead!

The speed of Seoul city streets
The rhythm of our noble youth's hearts,
Arts that seep into the mind
Will progress hand in hand across continents...

These fluid arts that leap across borders,
A bridge that moves and touches the uprightness!
The peace of the East is a dream for us -
Another new form born in the dawn!

Is it the beautiful shadow of the path of development?
Or an awakening seen through miraculous arts?
Let us weave this echo with words -
We shall change into a new space through our creations...